கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்:

முனைவர். ம. ஈஸ்வரமூர்த்தி,

எம்.எஸ்.சி., எம்.ஃபில்., பி.எச்.டி.,

கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ),

கல்லூரிக் கல்வி இயக்ககம்,

சென்னை -15.

பெறுநர்:

கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,

அனைத்து மண்டலங்கள்.

ந.க.எண்.18255/எம்1/2022, நாள். 11.11.2022.

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை - சென்னை-15, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2022 - 23 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கையில் காலியாக உள்ள பாடப்பிரிகளில் 18.11.2022-க்குள் மாணாக்கர்கள் சேர்க்கை செய்ய தெரிவித்தல் - சார்பு.

பார்வை: 11.11.2022 அன்று உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்தது.

.....

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் நடத்தப்பட்ட கல்லூரிக் கல்வித் துறை குறித்த ஆய்வு கூட்டத்தில், தற்போது +2 துணைத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுள்ள நிலையில் அம்மாணாக்கர்களும் பயன் பெறும் வகையில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2022-23 ஆம் ஆண்டு நடைபெற்ற மாணவர் சேர்க்கையில் தற்போது காலியாக உள்ள பாடப்பிரிவுகளில் மாணாக்கர்களுக்கு விண்ணப்பங்களை நேரடியாக வழங்கி காலியிடங்களில் உரிய நடைமுறைகளை பின்பற்றி எதிர்வரும் 18.11.2022 - வரை மாணவர்களை சேர்க்கை செய்ய அறிவுறுத்தப்பட்டது.

எனவே, அனைத்து மண்டல இணை இயக்குநர்கள் தங்கள் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு சுற்றறிக்கை மூலம் மேற்குறித்தவாறு மாணவர் சேர்க்கைக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் மாணவர் சேர்க்கை செய்யப்பட்ட விவரங்களை கல்லூரிக் கல்வித் துறையின் இணையதள முகவரியான tndceoffice@gmail.com மற்றும் எம் - பிரிவு இணையதள முகவரியான dcemsection@gmail.com -க்கு ஒருங்கிணைக்கப்பட்ட படிவத்தில் ( Consolidated report) அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒப்பம்) 11/11/22

கல்லூரிக் கல்வி இயக்குநர்(மு.கூ.பொ)

11/11/22